| | | |
|---|---|---|
| O.S No. | : | 75/2023 |
| DATE | : | 12.03.2026 |
| **பெயர்** | : | **வெங்கடேசன் (எ) வெங்கடேச பெருமாள்** |
| **தந்தை பெயர்** | : | **C.P.சீனுவாசன்** |

**வாதி தரப்பு பி.வா.சா.2 குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனக்கு முன்பு சாட்சி அளித்தவர் பி.வா.சா.–1 எனது தந்தை . அவர் தனது குறுக்கு விசாரணையின் போது கூறிய விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எனது தந்தை தனது குறுக்கு விசாரணையில் கூறிய விவரங்கள் அனைத்தும் சரிதான். வாதி தாவா சொத்தை கிரையம் வாங்கி அங்கு கடை நடத்தி வருகிறார். தாவா இடம் பஜார் தெரு. பக்கத்து பக்கத்தில் வேறு கடைகளும் உள்ளது, பின்னர் சாட்சி தானாகவே முன்வந்து மற்ற கடைகள் அனைத்தும் அமைந்துள்ள சொத்துக்கள் ஒரே நபருக்கு சொந்தமானது, எங்களது சொத்தும் தாவா சொத்தும் பாகப்பிரிவினை அடிப்படையில் வெவ்வேறு நபர்களுக்கு சொந்தமானது.

2. வாதி கடைக்கும் எங்களது பொது நாராசத்திற்கும் இடையில் ஒரு பொது மின் கம்பம் உள்ளது. எனது சார்பாகவும் எனது தந்தை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதாக பி.வா.சா.1 எனது தந்தை தெரிவித்துள்ளார். ஆகவே நான் தனியாக சாட்சியம் அளிக்க அவசியம் இல்லை, எனது தந்தையே அனைத்து விவரங்களையும் தெரிவித்து விட்டார் என்றால் சரிதான். வாதி அவருக்கு சொந்தமாக முன்புறம் உள்ள இடத்தை அனுபவித்து வருகிறார் நாங்கள் வேண்டுமென்றே தகராறு செய்கிறோம் அதனால் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முன்புறம் உள்ள இடத்தில் உரிமை கோர எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram
Digitally signed by FANNY RAJAN
Date: 2026.03.12 19:20:12 +0530